[1970 நவம்பர் 28

திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். எனவே, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான மொத்தக் கால அளவு 10 ஆண்டுகளாகும்.

DR. H. V. HANDE : For a long time a controversy has been going on in the Coimbatore area with regard to whether the Parambikulam-Aliyar water should be given for cultivation of dry crops or wet crops. Now that we are having extra water for the area, will the Government tell us whether they will allow the cultivation of wet crops in the area? What is the amount allotted for the scheme and what is the numbrr of acres to be benefited?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தப் பகுதியிலே இருக்கிற நிலப்பரப்பை பண்படுத்துவதற்காக இந்தத் திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பண்படுத்துவதற்காக 10 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவு செய்து பண்படுத்த வேண்டுமென்ற திட்டம் ஒன்று 1965-ம் ஆண்டிலேயே இருந்தது. படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. முதல் தவணையாக 75 ஆயிரம் ஏக்கருக்கு 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது தவணையாக 85,100 ஏக்கருக்கு 4 கோடியே 52 லட்சம் செலவு செய்யப்பட்டது. மூன்றுவது தவணையாக 32,000 ஏக்கருக்கு 190 லட்சம் அதாவது ஒரு கோடியே 90 லட்சம் செலவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : May I know whether the Government is prepared to consider the request of the ayacutdars to declare the whole area as a wet crop area and give them facilities in the context of the new scheme?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்தத் திட்டம் "டிரை பிராஜக்ட்" ஆக ஏற்படுகிற திட்டம். இப்போது கொடுக்கின்ற தண்ணீர் ஏற்கனவே நாம் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு ஆயக்கட்டுகளுக்கு கிடைப்பதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது.

It is too early to consider the question of allowing wet crops.

Programmes of Social Welfare Board

*46 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Social Welfare Board has programmed to organise a wing to clean Madras City?—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம். நகர துப்புரவுப் பணியில் மகளிர் நலத்துறை அவ்வப்போது ஈடுபட்டு வருகிறது.

திரு. கே. சகாதேவ கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தைத் துப்புரவு செய்வதற்கு இனிமேல் இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமூக நலத் துறை வாரியம் மூலமாகவும் நமது மாநில அரசாங்கத்தின் மகளிர் அமைப்புகள் மூலமாகவும் துப்புரவுப் பணி இதிலே விருப்பம் உள்ள மக்களை வைத்து செய்யப்பட்டு வருகிறது. இன்னும் கல்லூரி மாணவர்களை வைத்து துப்புரவு எப்படிச் செய்ய வேண்டுமென்று, சில பகுதிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கல்லூரி மாணவிகளை வைத்தும் இது செய்யப்படுகிறது.

Tamil Nadu Development Supplement

* 21 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Tamil Nadu Development Supplement was released in the press about 30th June 1969;

(b) the details thereof; and

(c) the cost of the publication?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

சோழவந்தானில் உள்ள மனமகிழ் மன்றங்கள்.

* 22 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தானில் Recreation Club -கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மனமகிழ் மன்றங்கள் மூன்று உள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: சோழவந்தானில் மாத்திரம் அல்ல. தமிழ் நாட்டில் இருக்கிற ரெக்ரியேஷன் கிளப்புகள் என்கிற பெயரால் நடத்தப்படுகிற இடங்களில் எல்லாம் சூதாட்டமும் சட்டத்திற்குப்புறம்பான செயல்களும் அதிகமாக நடைபெறுகிற காரணத்தால் அவைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அனுமதியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவற்றிற்குக் கொடுத்திருக்கிற அனுமதி மத்திய அரசாங்க 1860 சங்கங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் 20-வது பிரிவின் கீழ் இவைகள் நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யப்படுகின்றன. சூதாட்ட இடங்களாக இருப்பதைப் போலீசார் கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். லைசென்சை ரத்து செய்ய முடியாத நிலையிலே அதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இதை ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: இந்த ரிக்ரியேஷன் கிளப்புகள் என்று சொல்லப்படுகிற அடிப்படையிலே, சென்னையிலே கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதிகமான அளவு லைசென்ஸ் கொடுக்கப்பட்